# தமிழச்சி தங்கபாண்டியன்

**தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்**


03.08.2023

## சென்னை பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு செல்ல அதிக அளவில் விமான சேவைகளை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி கேள்வி

**கேள்வி** :-

அ) சென்னை பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு செல்ல அதிக அளவில் விமான சேவைகளை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? ஆம் என்றால் அதன் விவரங்கள் என்ன?

ஆ) சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் மொத்த விமான சேவைகளின் எண்ணிக்கை எவ்வளவு? மற்றும் கூடுதல் பன்னாட்டு விமான தளங்கள் மற்றும் வாயில்கள் அமைப்பதன் மூலம் கூடுதல் விமான சேவை கிடைக்க வாய்ப்பு உள்ளதா?

இ) சென்னையிலிருந்து வெளிநாடுகளுக்கு நேரடியாக இயக்கப்படும் விமான சேவைகளை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? மற்றும்

ஈ) சரக்கு விமான செயல்பாடுகளுக்காக பிரத்தியேகமாக சென்னை சர்வதேச விமான நிலைய இணையத்தில் கூடுதல் ஓடுபாதை அமைக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? அப்படி இருந்தால் அதன் விவரம் என்ன?

**சிவில் விமான போக்குவரத்து மத்திய இணை அமைச்சர் ஜெனரல் டாக்டர். வி.கே. சிங் பதில்**

அ) முதல் ஈ) வரை பதில்கள்:

சர்வதேச விமான சேவைகளானது அந்தந்த நாடுகளுக்கு இடையேயான செயல்பாடுகள், இந்தியாவுடன் அந்தந்த நாடுகளுக்கு இடையேயான இரு தரப்பு விமான சேவைகள் ஒப்பந்தத்தால் ASA நிர்வகிக்கப்படுகிறது. ASAக்கு இணங்க இந்தியாவுடன் பரஸ்பர ஒப்பந்தத்தின் படி சென்னை உட்பட எந்த விமான நிலையங்களிலும் அதன் அடிப்படை வசதிகளை அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து 50க்கும் மேற்பட்ட வெளிநாடுகளுக்கு, பயணிக்க விமான சேவை ஏற்கனவே இருந்து வருகிறது. இந்தியாவின் எந்த இடத்தில் இருந்தும் வெளிநாடுகளுக்கு விமான சேவை இருக்கிறது.

நாடு முழுவதும் இருந்து நேரடியாக சர்வதேச விமான சேவை தொடங்குவதற்கான சில காரணிகள் முட்டுக்கட்டையாக உள்ளது. அவை விமான நிறுவனங்கள் பொருளாதாரத்தை எதிர்நோக்கி உள்ளது. வெளிநாட்டு விமான சேவைக்கான அங்கீகாரம் கிடைக்க பெறாமல் இருப்பது. மற்றும் விமானங்கள் கிடைக்க பெறாமல் இருப்பது உள்ளிட்ட பல காரணங்கள் அறிய வந்துள்ளது.

இன்றைய நிலவரப்படி சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து 26 சர்வதேச விமான வழித்தடங்களில் விமானங்கள் இயக்கப்படுகின்றன. இதனால் 19 நாடுகளுக்கு நேரடியாக பயணிக்க முடிகிறது

ஈ தற்போது சென்னை சர்வதேச விமான நிலைய த்திலிருந்து சரக்கு விமான செயல்பாடுகளுக்கான கூடுதல் ஓடு பாதைகள் அமைக்க திட்டம் எதுவும் இல்லை.